# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- கர்நாடக சங்கீதம்**

சுட்டெண்:...................... **தரம் - 11** **நேரம் : 03 மணி**

## பகுதி - I

**01. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01. லலித கலைகளுள் சிறந்தது
1. நடனம் 2. சங்கீதம் 3. சிற்பம் 4. ஓவியம்

02. அப்பியாசகானத்திற்கும், சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி
1. கீதம் 2. கீர்த்தனை 3. வர்ணம் 4. பதம்

03. வேத சக்கரத்தில் நான்காவது இராகம்
1. கரஹப்ரியா 2. தோடி 3. கல்யாணி 4. சங்கராபரணம்

04. தமிழ்ப்பதங்கள் எத்தெய்வத்தின் மீது பாடப்படுகிறது.
1. கிருஷ்ணர் 2. முருகன் 3. கணபதி 4. சிவன்

05. பஜனைப் பத்ததியின் தந்தை எனப் போற்றப்படுபவர்
1. ஹரிபாலர் 2. அருணகிரிநாதர்
3. தாளப்பாக்கம் சின்னை 4. அண்ணமாச்சாரியார்

06. அலங்காரம் ஒன்றில் காணப்படும் ஆவர்த்தனங்கள்
1. 8 2. 12 3. 15 4. 10

07. ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்படுவது
1. திருவிசைப்பா 2. புராணம் 3. திருவாசகம் 4. திருப்பாவை

08. பின்வருவனவற்றுள் சதுஸ்ரஜாதி துருவதாளத்தைக் குறிப்பது
1. $|_3 o |_3 |_3$ 2. $|_4 o |_4 |_4$ 3. $|_5 o |_5 |_5$ 4. $|_7 o |_7 |_7$

09. ஸ்ராடிவேரியஸ் என்பவரால் உருவாக்கப்பட்ட வாத்தியம்
1. வீணை 2. புல்லாங்குழல் 3. தம்புரா 4. வயலின்

10. விவாதி தோஷமற்ற மேளங்களின் எண்ணிக்கை
1. 28 2. 32 3. 40 4. 72

11. சிவபெருமானே கீதம் அமைந்துள்ள இராகம்
1. மத்தியமாவதி 2. ரேவதி 3. மோகனம் 4. பிலஹரி

12. சதுர்தண்டிப் பிரகாசிகா எனும் நூலை எழுதியவர்
1. கோவிந்தாச்சரியார் 2. சுவாதித்திருநாள் மகாராஜா
3. வெங்கட்மகி 4. துளஜா மகாராஜர்

13. பாண சக்கரத்தில் காணப்படும் மேளங்கள்
1. 25 - 30 2. 31 - 36 3. 19 - 24 4. 55 - 60

14. பேரின்பப் பதங்களை இயற்றியவர்
1. புரந்தரதாசர் 2. பாபநாசம் சிவன் 3. தியாகராஜர் 4. முத்துத்தாண்டவர்

15. இராகத்திற்கு இராகம் மாறுபடும் ஸ்வரங்கள்
1. ரி.க. 2. ஸ, ப 3. த,நி 4. ஸ, ம

16. ஹிந்துஸ்தானி இசையில் கமாஜ்தாட் என அழைக்கப்படுவது
1. கரிஹாம்போதி 2. மாயாமாளவகௌளை 3. கல்யாணி 4. தோடி

17. வாத்தியத் த்ரயத்தில் இரண்டாவதாக இடம்பெறும் வாத்தியம்
1. வீணை 2. புல்லாங்குழல் 3. மிருதங்கம் 4. வயலின்

18. பூர்வாங்கத்தில் இடம்பெறும் இராகங்களின் எண்ணிக்கை
1. 1 - 72 2. 37 - 72 3. 1 - 36 4. 45 - 65

19. ஐந்து அங்கங்களைக் கொண்ட உருப்படி
1. வர்ணம் 2. பதம் 3. இராகமாலிகை 4. கீர்த்தனை

20. தியாகராஜசுவாமிகளின் கிருதிகளுக்கு ஒப்பான ரசம்
1. கதலிரசம் 2. நாளிகோரசம் 3. கானரசம் 4. திராட்சைரசம்

21. இரகுநாதமன்னர் ஆட்சிக் காலத்தில் முழு வளர்ச்சி அடைந்த வாத்தியம்
1. புல்லாங்குழல் 2. வீணை 3. வயலின் 4. நாதஸ்வரம்

22. கரிஹாம்போதி இராகத்தின் நேர்ப்பிரதிமத்திம இராகம்
1. சுபபந்துவராளி 2. திவ்யமணி 3. வாசஸ்பதி 4. லதாங்கி

23. துருவதாளத்தின் கடைசி லகுவை நீக்கினால் வரும் தாளம்
1. அடதாளம் 2. திரிபுடைதாளம் 3. துருவதாளம் 4. மட்டிய தாளம்

24. பிரஹலாத பக்தி விஜயம் என்ற இசைநாடகத்தை இயற்றியவர்?
1. தியாகராஜர் 2. புரந்தரதாஸர் 3. கோபாலகிருஷ்ணர் 4. பாவநாசசிவம்

25. சங்கீர்ண என்ற விருதைப் பெற்ற பல்லவ மன்னன்
1. ராஜராஜசோழன் 2. நின்றசீர்நெடுமாறன் 3. மகேந்திரவர்மன் 4. பாண்டியன்

26. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் இடம்பெறும் வாத்தியங்கள்
1. கடம், ஓர்கன் 2. உடுக்கு, வயலின்
3. தவில், புல்லாங்குழல் 4. ஹார்மோனியம், விற்கடம்

27. சங்ககாலத்திலிருந்த உலகியல் சார்ந்த இசை பக்தி இசையாக மறுமலர்ச்சி கண்ட காலம்
1. சோழர்காலம் 2. பல்லவர்காலம் 3. நாயக்கர்காலம் 4. வேதகாலம்

28. “சிவகாமசுந்தரி” என்ற முகாரி இராகக் கிருதியின் எடுப்பு
1. அதீதஎடுப்பு 2. அனாகத எடுப்பு 3. சமஎடுப்பு 4. ஆகதஎடுப்பு

29. ஸரகிமபதநி எனும் ஸ்வர சங்கேதங்களால் குறிக்கப்படும் இராகம்
1. சங்கராபரணம் 2. கீரவாணி 3. தோடி 4. கல்யாணி

30. மத்தியஸ்தாயி ஸ்தவத்திற்கு மேல் சஞ்சாரமில்லாத இராகம்
1. குறிஞ்சி 2. நாதநாமக்கிரியை 3. நவரோஜ் 4. பிலஹரி

31. “அன்னமே…” எனும் தாளவர்ணம் அமைந்த இராகம்
1. மத்தியமாவதி 2. ஆரபி 3. சாவேரி 4. மாயாமாளவகௌளை

32. வேதசக்கரத்தின் நேர்ப்பிரதிமத்திம சக்கரம்
1. ருத்ர 2. ப்ரம்ம 3. திசி 4. ஆதித்ய

33. தோடி இராகத்தை பாடுவதில் தேர்ச்சி பெற்றவர்
1. நரசய்யர் 2.ஸீதாராமய்யர் 3 பொன்னையாப்பிள்ளை 4. புரந்தரதாஸர்

34. திருத்தாண்டகம் பாட ஏற்ற இராகம்
1. கரிஹாம் போதி 2. மோகனம் 3. மத்தியமாவதி 4. திருவிசைப்பா

35. வயலினைக் கர்நாடக இசைக்கு அறிமுகப்படுத்தியவர்
1.ஸ்ராடிவேரியஸ் 2. பாலுஸ்வாமிதிட்ஷிதர்
3. வைணிகர் 4. ஆழ்வார்கள்

36. அதிகூடிய மொத்த அட்சரங்களைக் கொண்ட தாளம்
1. சங்கீர்ணஜாதி 2. சங்கீர்ணஜாதி அடதாளம்
3. மிஸ்ரஜாதி 4. சங்கீர்ணஜாதி துருவதாளம்

37. வயலின் வாத்தியத்தின் நான்கு தந்திகளின் பெயர்கள்
1. ஸபஸப 2. பஸஸஸ 3. ஸமஸஸ 4. பஸபஸ

38. ஆச்சா மரத்தால் செய்யப்படுவது
1. புல்லாங்குழல் 2. நாதஸ்வரம் 3. தம்புரா 4. வீணை

39. அன்னியஸ்வரத்தின் குறீயிடு
1. ~~~ 2. // 3. * 4. /

40. தாய் இராகத்தில் இருந்து பிறந்த இராகம்
1. ஜனகராகம் 2. வர்ஜராகம் 3. வக்ரராகம் 4. ஜன்னியராகம்

(40X01= 40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட வேறு நான்கு வினாக்களை தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

01. விவாதிமேளங்கள் எத்தனை?
02. வீணை வாசிப்பதில் கைதேர்ந்தவர்களை எச்சிறப்புப் பெயரால் அழைப்பர்?
03. தமிழில் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இயற்றியவர்?
04. திரியாங்கத்தை எடுத்துக் கொள்ளும் தாளம்?
05. கோமள ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் இராகம் எது?
06. ஹரிபாலரால் இயற்றப்பட்ட நூல்?
07. கோவிந்தாச்சாரியாரின் நூல்?
08. பஞ்சபுராணம் பாடும் போது திருவிசைப்பாவிற்கு அடுத்துப் பாடப்படுவது?
09. வர்ணத்தின் இருவகைகள் எவை?
10. ஜனகராகத்தின் மறுபெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

(12 புள்ளிகள்)

**02. பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்தின் இலடச்சணத்தை விரிவாகத் தருக.**

01. கரிஹாம்போதி
02. கரஹரப்ரியா
03. தோடி

(12 புள்ளிகள்)

**03. பின்வரும் உருப்படிகளில் விரும்பிய ஓர் உருப்படியின் இலட்சணத்தை விரிவாகத் தருக.**

01. வர்ணம்
02. பதம்

(12 புள்ளிகள்)

**04.**

01. 72 மேளகர்த்தா அமைப்பில் வரும் 12 சக்கரங்களினதும் பெயர்களைத் தருக?
02. 3ஆவது சக்கரத்தில் வரும் மேள எண்களையும் இராகங்களையும் ஸ்வரஸ்தானங்களையும் அட்டவணைப்படுத்துக?

(12 புள்ளிகள்)

**05. சிறுகுறிப்பு வரைக.**

01. க்ரஹம் 2. பூர்வாங்கம் 3. உத்தராங்கம்

(12 புள்ளிகள்)

**06. 12 ஸ்வரஸ்தாளங்கள் 16 ஸ்வரப் பெயர்களாக உருவாகிய விதத்தை விளக்குக?**

**07.**

01. "பிடில்" என அழைக்கப்பட்ட வாத்தியம் யாது?
02. இவ்வாத்தியத்தின் சிறப்புக்கள் இரண்டினைத் தருக?
03. இவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக?
04 இவ்வாத்தியத்தின் சுருதி சேர்க்கும் முறையைக் குறிப்பிடுக?
05. இவ்வாத்தியத்தை வாசித்து பிரபல்யடைந்த வித்துவான்கள் இருவரது பெயர்களைத் தருக?

(12 புள்ளிகள்)